MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group · NUH National University Hospital · Alexandra Health · Eastern Health Alliance · JurongHealth · SingHealth

SINGHEALTH / PIL / T67R0

நோயாளி தகவல் கையேடு

# பார்கின்சன் நோய்க்கான துணை மருந்துகள்

(Parkinson's Medicine)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

### பார்கின்சன் நோய் சிகிசசையில், அமான்டடின் (Amantadine), பென்செக்சோல் (Benzhexol), என்டகபோன் (Entacapone) மற்றும் செலிஜிலின் (Selegiline) ஆகிய மருந்துகள் தனியாகவோ அல்லது மற்ற மருந்துகளுடனோ (எ.கா. Levopoda தயாரிப்புகளுடன்) பயன்படுத்தப்படுகின்றன. இம்மருந்துகள் நோயாளியின் தசைக் கட்டுப்பாட்டை மேம்படுத்தியும், தசை இறுக்கத்தைக் குறைத்தும், பார்கின்சன் நோயின் பாதிப்புகளைக் குறைக்க உதவுகின்றன.

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

இம்மருந்துகளை உணவுடன் உட்கொள்ள வேண்டும். நீங்கள் துங்குவதற்குச் சிரமப்படுபவர் என்றால், அமான்டடின் மற்றும் செலிஜிலின் மருந்துகளின் கடைசி வேளை மருந்தை பிற்பகலின் ஆரம்பத்திலேயே, அல்லது உறங்கச் செல்வதற்கு குறைந்தது பல மணி நேரத்திற்கு முன்பே உட்கொண்டுவிட வேண்டும்

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

பின்வரும் பக்க-விளைவுகள் தொடர்ந்து நீடித்தாலோ அல்லது அவை நாளடைவில் மோசமடைந்தாலோ மருத்துவரிடம் கூறுங்கள்

அமான்டடின் **(Amantadine)**

- ஜீரண மண்டலம்: குமட்டல், வயிற்றுப்போக்கு அல்லது மலச்சிக்கல், வாய் உலர்தல், பசியின்மை
- இருதய இரத்தக் குழாய்கள்: குறைந்த இரத்த அழுத்தம், கைகள், பாதம் அல்லது காலின் கீழ்ப்பகுதி வீங்குதல்
- மத்திய நரம்பு மண்டலம்: தலைச்சுற்றல், தலைவலி, துங்குவதற்கு சிரமப்படுதல், பயங்கர கனவுகள் வருதல், மனநிலையில் மாற்றங்கள் ஏற்படுதல்
- தோல்: வலை போன்ற தடிப்புகள்
- மூச்சு மண்டலம்: மூக்கு உலர்தல்

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

பென்செக்சோல் **(Benzhexol)**

- ஜீரண மண்டலம்: மலச்சிக்கல், வாய் மற்றும் தொண்டை உலர்தல்
- மூச்சு மண்டலம்: மூக்கு உலர்தல்
- தோல் : தோல் உலர்தல்

என்டகபோன் **(Entacapone)**

- ஜீரண மண்டலம்: குமட்டல், வயிற்றுப்போக்கு அல்லது மலச்சிக்கல், வயிற்று வலி
- நரம்பு, தசை மற்றும் எலும்பு: வழக்கத்திற்கு மாறான தசை அசைவுகள்
- மத்திய நரம்பு மண்டலம்: தலைச்சுற்றல், களைப்பு, பிரமை
- சிறுநீரக மண்டலம்: சிறுநீர் கருநிறமாகுதல்

செலிஜிலின் **(Selegiline)**

- ஜீரண மண்டலம்: வயிற்று வலி, வாய் உலர்தல், குமட்டல்
- நரம்பு, தசை: வழக்கத்திற்கு மாறான தசை அசைவுகள்
- மத்திய நரம்பு மண்டலம்: மனநிலை மாற்றங்கள், தலைசுற்றல், துங்குவதற்கு சிரமப்படுதல்

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

கிறுகிறுப்பு, தலைசுற்றல் அல்லது மயக்கம் போன்றவை, குறிப்பாக உட்கார்ந்துவிட்டு அல்லது படுத்துவிட்டு எழும்போது சிலருக்கு ஏற்படலாம். இவர்கள் மெதுவாக எழுந்திருப்பது நல்லது. எனினும், இப்பிரச்சினை நீண்ட நாட்கள் நீடித்தாலோ அல்லது மோசமானாலோ மருத்துவரிடம் சோதியுங்கள்.

சிலருக்கு மந்தம், தலைசுற்றல் அல்லது பார்வை குறைதல் போன்றவை ஏற்படலாம். மருந்து எந்த அளவுக்கு பாதித்துள்ளது என்பதை அறிந்துகொள்ளும்வரை வாகனம் ஓட்டாதீர்கள் அல்லது இயந்திரங்களை இயக்காதீர்கள்.

மருந்தினால் உங்கள் உடல்நிலை மேம்பட்டு வந்தாலும் அதிகக் கடுமையாக உடல் சார்ந்த நடவடிக்கைகளில் உடனே ஈடுபடாதீர்கள். ஏனெனில், நீங்கள் கீழே விழுந்து காயங்கள் ஏற்படலாம். உடலின் சமநிலையும் இயக்கமும் மேம்படுவதற்கு ஏற்ப நடவடிக்கைகளைப் படிப்படியாக உயர்த்துங்கள்.

இம்மருந்துகள் வாயை உலரச் செய்யலாம். இதிலிருந்து தற்காலிக நிவாரணம் பெறுவதற்கு நோயாளிகள் இனிப்பில்லாத மிட்டாய்களை அல்லது ஐஸ் கட்டிகளைச் சப்பலாம். நிறைய தண்ணீரும் அருந்த வேண்டும்.

பென்செக்சோல எடுப்பவர்களுக்கு குறைவாக வியர்க்கும் என்பதால், உடற்பயிற்சி செய்யும்போது அல்லது வெய்யில் அதிகமாக இருக்கும்போது உடல் அதிகச் சூடாகலாம். இவர்கள் உடல் அதிகச் சூடாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

மற்ற மருந்துகள் அல்லது உணவுகளுடன் ஏற்படும் எதிர் விளைவுகள்:

அமான்டடின், பென்செக்சோல் அல்லது என்டகபோன் மருந்துகளை மதுபானம், அல்லது நரம்பு மண்டலத்தை மெதுவடையச் செய்யும் மருந்துகளுடன் உட்கொள்ளும்போது மந்தம், தலை கிறுகிறுப்பு, குழப்பம் மற்றும் தலைச்சுற்றல் அதிகமாகலாம்.

செலிஜிலின் அதிக அளவில் எடுப்பவர்கள் (ஒரு நாளைக்கு 10 மி.கிராமுக்கு அதிகமாக), டைரமின் நிறைந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும். டைரமின் (tyramine) நாள்பட்ட அல்லது பதனம் செய்யப்பட்ட உணவுகளில் காணப்படுகிறது ( எ.கா. பாலாடைக் கட்டி, சுட்ட அல்லது ஊறவைத்த இறைச்சி, அதிகம் பழுத்த பழங்கள்). மது அல்லது கா.ஃபீன் கலந்த உணவுகள் மற்றும் பானங்களையும் (காப்பி, தேநீர், கோலா அல்லது சாக்லெட்) இவர்கள் தவிர்க்க வேண்டும். இவற்றை செலிஜிலின் மருந்தோடு சேர்த்து உட்கொள்ளும்போது இரத்த அழுத்தம் அதிகமாகி, நெஞ்சு வலி, தலைவலி, குமட்டல் மற்றும் வாந்தி ஏற்படலாம். இந்த அறிகுறிகள் ஏற்பட்டால் மருத்துவ உதவி நாடுங்கள்.

வேறு மருந்து எதையும் எடுக்க ஆரம்பிப்பதற்கு முன்பாக, அல்லது மூலிகைகள், ஊட்டச்சத்துப் பொருட்கள் அல்லது வைட்டமின்கள் போன்றவற்றை நீங்கள் ஏற்கனவே எடுத்து வந்தால், மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள். ஏனெனில், இவை மருந்துக்கு எதிர் விளைவுகளை உண்டாக்கலாம்.

மருந்துகளை ஒருபோதும் திடீரென்று நிறுத்தாதீர்கள். தேவையில்லாத பாதிப்புகள் உண்டாகலாம்.

வேறு எந்த மருந்துக்காவது ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால், மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் உடனே தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமை ஏற்படும்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது இருக்கும்: முகம்/கண்கள்/உதடுகள் வீங்குதல், மூச்சுவிட சிரமப்படுதல், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றுதல்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும்?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.